உ

கணபதிதுணை.

அம்பலவாணகவிராயர்பாடிய

சதுரகிரி

# அறப்பளீசுர சதகம்

சுத்தபாடம்.

இது

காரைக்கால்

மு. பொன்னுச்சாமிமுதலியாரால்

முகம்மதுசமதானி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விய ௵ வைகாசி மீ.

உ

கணபதிதுணை.

# அறப்பளீசுரசதகம்.

## காப்பு.

உம்பர்கோ னெம்பெருமா னுங்கறப்ப ளீசுரன்மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே - யம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

(உயர் பிறப்பு.)

கட்டுலகில்வாழுமுயி ரெழுபிறப்பினுண்மிக்க காட்சிபெ...
கருதப்பிறத்தலரி ததினுமுயர்சாதியிற் கற்புவழிவருதலரி து
வடிவமுடனவயவங் குறையாதுபிழையாது வருதலரிததனிலும்
வந்தாலுமிதுபுண்ய மிதுபாவமென்றெண்ணி மாசில்வழிநிற்றலரிது
நெடியதனவானுத லரிததினிரக்கமுள நெஞ்சினேனுதலரிது
நேசமுடனுன்பதத் தன்பனாய்வருதலினீணிலத்ததினுமரிதாம்
அடியவர்க்கமுதமே மோழைபூபதிபெற்ற வதிபனெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (க)

(மனையாட்டி சிறப்பு.)

கணவனுக்கினியளா யமிர்தபாஷியாய்மிக்க கமலைநிகரூபவதியாய்க்
காய்சினமிலாளுமாய் நோய்பழியிலாதவோர் கால்வழியில்வந்தவளுமாய்
மணமிக்கநாணமட மச்சம்பயிர்ப்பென்ன வருமினியமார்க்கவதியாய்
மாமிமாமற்கிதஞ் செய்பவளுமாய்வாயில் வருவிருந்தோம்புபவளாய்
இணையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தி யெனப்பெயரிலாதவளு
இரதியெனவேலீலைபுரி பவளுமாய்ப்பிறர்த மில்வழிசெலாதவளுமாய் [மாய்
அணியிழையொருத்தியுண் டாயினவள்கற்புடைய ளாகுமெமதருமைமதவே
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ) [ள்

(நன்மக்கட்பேறு.)

தங்குலம்விளங்கிடப் பெரியோர்கள்செய்துவரு தருமங்கள்செய்துவரலும்
தன்மைமிகுதானங்கள் செய்தலுங்கனயோக சாதகனெனப்படுதலும்
மங்குதலிலாததன் றந்தைதாய்குருமொழி மறாதுவழிபாடுசெயலும்
வழிவழிவருந்தமது தேவதாபத்திபுரி மார்க்கமுந்தீர்க்காயுளும்
இங்கிதகுணங்களும் வித்தையும்புத்தியு மீகையுஞ்சன்மார்க்கமும்
இவையெலாமுடையவன் புதல்வனுமவனையே யீன்றவன்புண்யவானும்
அங்கசவிரோதியே சோதியேநீதியே ரரசனெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩)

(சகோதர ரொருமை.)

கூடப்பிறந்தவர்க் கெய்துதுயர்தமதுதுயர் கொள்சுகந்தஞ்சுகமெனக்
கொண்டுதாந்தேடுபொரு ளவர்தேடுபொருளவர்கொள் கோதில்புகழ்தம்புக
தேடுற்றவவர்நிந்தை தந்நிந்தைதந்தவந் தீதிலவர்தவமாமெனச் [ழெனத்
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்னவைந்தலைச் சீறரவமணிவாய்தொறும்
கூடு... ...லிரையெடுத் தோருடனிலுறதிடுங் கொள்கைபோற்பிரிவின்றியே
கூ... ...மையேசகோதரரெனக் கூறுவதுவேதருமமாம்
... ...ரைப்பாதனே யண்ணலெமதருமைமதவேள்
...ன தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪)

(சற்குரு வியல்பு.)

வேதாந்தசித்தாந்த வழிதெரிந்தாசார விவரவிஞ்ஞானபூர்ணவித்யா
விசேஷசற் குணசத்யசம்பன்ன வீரவைராக்யமுக்ய
சாதாரணப்பிரிய யோகமார்க்காதிக்ய சமாதிநிஷ்டானுபவராய்ச்
சட்சமயநிலைமையும் பரமந்த்ரபரதந்த்ர தருமமும்பரசமயமும்
நீதியினுணர்ந்ததத் துவமார்க்கராய்ப்பிரம நிலைகண்டுபாசமிலராய்
நித்தியானந்தசை தன்யராயாசையறு நெறியுளோர்சற்குரவராம்
ஆதாரமாயுயிர்க்குயிராகியெவையுமா மமலவெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫)

(நன்மாணாக்க ரியல்பு.)

வைதாலுமோர்கொடுமை செய்தாலுமோசிறி மாறுதிகழ்ந்தாலுமோ
மனதுசற்றாகிலும் கோணுதுநாணுது மாதாபிதாவெனக்குப்
பொய்யாமனியென்று கனிவொடும்பணிவிடை புரிந்தபொருளுடலாவியும்
புனிதவுன்றனதெனத் தத்தஞ்செய்திரவுபகல் போற்றிமலரடியில்வீழ்ந்து
மெய்யாகவேபரவி யுபதேசமதுபெற விரும்புவோர்சற்சீடராம்
வினைவேரறும்படி யவர்க்கருள்செய்திடுவதே மிக்கதேசிகரதுகடன்
ஐயாபுரம்பொடி படச்செய்தசெம்மலே யண்ணலெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬)

(பொருள் செயல்வகை.)

புண்ணியவசத்தினாற் செல்வமதுவரவேண்டும் பொருளைரக்ஷிக்கவேண்டும்
புத்தியுடனதுவொன்று நூறாகவேசெய்து போதவும்வளர்க்கவேண்டும்,
உண்ணவேண்டும்பின்பு நல்லவஸ்திராபரண முடலிற்றரிக்கவேண்டும்
உற்றபெரியோர்கவிஞர் தமராதுலர்க்குதவி யோங்குபுகழ்தேடவேண்டும்
மண்ணில்வெகுதருமங்கள்செயவேண்டுமுயர்மோக்ஷ வழிதேடவேண்டுமன்றி
வறிதிற்புதைத்துவைத் தீயாதபேர்களே மார்க்கமறியாக்குருடராம்
அண்ணலேகங்கா குலத்தலைவன்மோழைதரு மிழகனெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (எ)

(தீவழி விலக்கு.)

வஞ்சகர்தமைக்கூடி மருவொணாதன்பிலார் வாயிலிற்செலவொணாது
வாதெவரிடத்திலும் புரியொணாதறிவிலா மடவர்முன்னிற்கொணாது
கொஞ்சமேனுந்தீது செய்யொணாதொருவர்மேற் குற்றஞ்சொல்லொணாதயற்
கோதையர்களோடுபரி காசஞ்செய்யொண்ணாதுகோளுரைகள்பேசொணாது
நஞ்சுதருமரவொடும் பழகொணாதிருள்வழி நடந்துதனியேகொணாது
நதிபெருக்காகினதி னீந்தல்செய்யொண்ணாது நல்வழிமறக்கொணாது
அஞ்சாமலரசர்முன் பேசொணாதிவையெலா மறியுமெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (அ)

(ஒன்றற்கொன் றழகுசெய்வன.)

வாழ்மனைதனக்கழகு குலமங்கைகுலமங்கை வாழ்வினுக்கழகுசிறுவர்
வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகு மாலினங் கதிசெய்குணமாம்
சூழ்குணமதற்கழகு பேரறிவுபேரறிவு தோன்றிடிலதற்கழகுதான்
தூயதவமேன்மையுப காரவிரதம்பொறுமை சொல்லரியபெரியோர்களைத்
தாழ்தல்பணிவிடைபுரிதல் சீலநேசங்கருணை சாற்றுமிவையாமென்பர்காண்
* சௌரிமலரோனமரர்முனிவர்முச்சுடரெலாஞ்சரணமெமைரக்ஷியெனவே
ஆழ்கடலுதித்தவரு விடமுண்டகண்டனே யண்ணலெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (கூ)

(ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.)

கோவிலில்லாதவூர் நாசியில்லாமுகங் கொழுநனில்லாதமடவார்
குணமதில்லாவித்தை மணமதில்லாதமலர் குஞ்சரமிலாதசேனை
காவலில்லாதபயிர் பாலரில்லாதமனை கதிர்மதியிலாதவானம்
கவிஞரில்லாதசபை சுதிலயையிலாதபண் காவலரிலாததேசம்
ஈவதில்லாததன நியமமில்லாதசெப மிசைலவணமில்லாதவூண்
இச்சையில்லாதபெண் போகநலமிவைதம்மி னேதுபலனுண்டுகண்டாய்
ஆவியனையாட்கிடந் தந்தவாகற்பதரு வாகுமெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௰)

---

* சௌரி=திருமால்.

(ஒன்றற்கொன்று தகாதசேர்க்கை.)

பூததயையில்லாத லோபியரிடத்திலே பொருளையருளிச்செய்தனை
புண்ணியஞ்செய்கின்ற சற்சனரிடத்திலே பொல்லாதமிடிவைத்தனை
நீதியகன்மூடருக் கருந்ததியெனத்தக்க நெறிமாதரைத்தந்தனை
நிதானமுளவுத்தமர்க் கிங்கிதமிலாதகொடு நீலியைச்சேர்வித்தனை
சாதியிலுயர்ந்தபே ரீனர்பின்னேசென்று தாழ்ந்துபரவச்செய்தனை
தமிழருமையறியாத புல்லர்மேற்கவிவாணர் தாம்பாடவேசெய்தனை
ஆதரவிலாமலிப் படிசெய்ததென்சொலா யமலவெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௰க)

(குணக்கேட ரியல்பு.)

ஞானகலைகற்று நிலைபெற்றசபையிலே வாயிலாதவனொருபதர்
வாள்பிடித்தெதிரிவரி னோடிப்பதுங்கிடு மனக்கோழைதானொருபதர்
ஒருவழக்குரைத் தினவருஞ்சீசியென் றிகழநிற்பானொருபதர்
இல்லாள்வலுஞ்செலச் சம்மதித்தவளோ டிணங்கிவாழ்பவனொருபதர்
வேறொன்றுமெச்சாத தன்னையேதான்மெச்சி வீண்பேசுவானொருபதர்
வேசையி லிச்சைகொண் டுள்ளளவுமனையாளை விட்டுவிடுவானொருபதர்
ஆருந்துயரையும் மிடியையுந்தீர்த்தருள்செய் யமலவெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௰உ)

(செய்யத் தக்கவை.)

வாலிபந்தனில்வித்தை கற்கவேண்டுங்கற்ற வழியிலேநிற்கவேண்டும்
வளைகட்டிரிந்துபொரு டேடவேண்டுந்தேடி வளரறஞ்செய்யவேண்டும்
சீலமுடையோர்களைச் சேரவேண்டும்பிரிதல் செய்யாதிருக்கவேண்டும் [ம்
செந்தமிழ்ப்பாடல்பலகொள்ளவேண்டுங்கொண்டுதியாகங்கொடுக்கவேண்டு
ஞாலமிசைபலதரும நாட்டவேண்டுந்நாட்டி நன்றாநடத்தவேண்டும்
நம்பனிணையடிபூசை பண்ணவேண்டும்பண்ணி னாலுங்குருபத்திவேண்டும்
ஆலமமர்கண்டனே பூதியணிமுண்டனே யனகவெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௰௩)

(மேன்மே லுயர்ச்சி)

தன்மட்டிலிரவாது சீவனஞ்செய்பவன் சாமர்த்தியமுளபுருஷனும்
சந்ததம்பதின்மரைக் காப்பாற்றுவோன்மிக்க தரணிபுகழ்தருதேவனும்
பொன்மட்டிலாமலீந் தொருநூறுபேரைப் புரப்பவன்பொருவிலிந்திரன்
புவிமீதிலாயிரம் பேர்தமைக்காப்பாற்று புண்யவானேபிரமனும்
நன்மைதருபதினா யிரம்பேர்தமைக்காத்து ரக்ஷிப்பவன்செங்கண்மால்
நாளுமிவன்மேலதிக மாகவெகுபேர்க்குதவு நரனேமகாதேவனும்
அன்மட்டுவார்குழலி பாகனேயேகனே யண்ணலெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேபனே. (௰ச)

(செயற்கருஞ் செயல்.)

நீர்மேனடக்கலா மெட்டியுந்தின்னலா நெருப்பைநீர்போற்செய்யலாம்
நெடியபெருவேங்கை யைக்கட்டியேதழுவலா நீளரவினைப்பூணலாம்
பார்மீதுமணலைச் சமைக்கலாஞ்சோறெனப் பக்ஷமுடனேயுண்ணலாம்
பாணமொடுகுண்டு விலகச்செய்யலாமரப் பாவைபேசப்பண்ணலாம்
ஏர்மேவுகாடியுங் கடையுற்றுவெண்ணெயு மெடுக்கலாம்புத்திசற்றும்
இல்லாதமூடர்த மனத்தைத்திருப்பவே யெவருக்குமுடியாதுகாண்
ஆர்மேவுகொன்றைபுனை வேணியாசுரர்பரவு மமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫)

(உத்தமராவோர்)

செய்நன்றிமறவாத பேர்களுமொருவர்செய் தீமையைமறந்தபேரும்
திரவியந்தரவரினு மொருவர்மனையாட்டிமேற்சித்தம்வையாதபேரும்[பேரும்
கைகண்டெடுத்தபொருள் கொண்டுபோய்ப்பொருளாளர் கையிற்கொடுத்த
காசினியிலொருவர்செய் தருமங்கெடாதபடி காத்தருள்செய்கின்றபேரும்
பொய்யொன்றுநிதிகோடி வரினும்வழக்கழிவு புகலாதநிலைகொள்பேரும்
புவிமீதுதலைபோகு மென்னினுங்கனவிலும் பொய்மையுரையாதபேரும்
ஐயவிங்கிவரெலாஞ் சற்புருஷரென்றுலகி லகமகிழ்வாருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬)

(இதுவுமது,)

அடைக்கலமெனத்தேடி வருவோர்தமைக்காக்கு மவனேமகாபுருஷனும்
அஞ்சாமலெதுவரினு மெதுபோகினுஞ்சித்த மசைவிலான்மகாதீரனும்
தொடுத்தொன்றுசொன்னசொற் றப்பாதுசெய்கின்ற தோன்றலேமகாராச
தூறிக்கலைக்கின்ற பேர்வார்த்தைகேளாத துரையேமகாமேருவாம் [னும்
அடுக்கின்றபேர்க்குவரு படர்தீர்த்துரக்ஷிக்கு மவனேமகாதியாகியாம்
அவரவர்தராதர மறிந்துமரியாதைசெயு மவனேமகாவுசிதனும்
அடர்க்கின்றமூத்தலைச் சூலனேலோலனே யமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭)

(ஒன்றிலொன்றில்லாமை.)

காமிக்குமுறையில்லை வேசைக்குநாணில்லை கயவர்க்குமேன்மையில்லை
கள்ளமிடுகள்வருக் கிருளில்லைவிபசார கன்னியர்க்காணையில்லை
தாமெனுமயக்கறுத் தோங்குபெரியோர்க்குவரு சாதிகுலமென்பவில்லை
தாக்ஷிணியமுடையபேர்க் கிகலில்லையெங்குமொரு சார்பிலார்க்கிடமதில்லை
பூமிக்குளீயாத லோபர்க்குவளமான புகழென்பதொன்றுமில்லை
புலையர்க்குநிசமில்லை கைப்பொருளிலாததோர் புருஷருக்கொன்றுமில்லை
யாமினிதனக்குநிகர் கந்தரத்திறைவனே யன்புடையவருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௮)

(யாக்கைநிலையாமைமுதலியவை)

காயமொருபுற்புதம் வாழ்வுமலைசூழ்தருங் காட்டிலாற்றின்பெருக்காம்
கருணைதருபுதல்வர்கிளை மனைமனைவியிவையெலாங் கானல்காட்டும்ப்ரவாகம்
மேயபுசபலவலிமை யிளமையழகிவையெலாம் வெயின்மஞ்சளுயிர்தானுமே
வெட்டவெளிதனில்வைத்த தீபமெனவேகருதிவீண்பொழுதுபோக்காமலே
நேயமுடனேதெளிந் தன்போடுபோதத்தி னினைவுவைத்திருபோதிலும்
நீர்கொண்டுமலர்கொண்டு பரிவுகொண்டர்ச்சிக்க நிமலனேயருள்புரிகுவாய்
ஆயுமறிவாளர்பணி பாதனேபோதனே யண்ணலெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௰௯)

(திருமங்கையிருப்பிடம்.)

நற்பரிமுகத்திலே மன்னவரிடத்திலே நாகரிகமாமனையிலே
நளினமலர்தன்னிலே கூவிளந்தருவிலே நறைகொண்டபைந்துளவிலே
கற்புடையர்வடிவிலே கடலிலேகொடியிலே கல்யாணவாயிறனிலே
கடிநகரிடத்திலே நற்செந்நெல்விளைவிலேகதிர்பெறுவிளக்குதனிலே
பொற்புடையசங்கிலே மிக்கோர்கள்வாக்கிலே பொய்யாதபேர்பாலிலே
பூந்தடந்தன்னிலே பாற்குளத்திடையிலே போதகத்தின்சிரசிலே
அற்புதக்கோதைமலர்மங்கைவாழிடமென்ப ரண்ணலெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௨௰)

(மூதேவியிருப்பிடம்.)

மிதமின்றியன்னம் புசிப்போரிடத்திலு மிருபாஷையோரிடத்தும்
மெய்யொன்றிலாமலே பொய்பேசியேதிரியு மிக்கபாதகரிடத்தும்
சதியொன்றுமிலர்போல மலினங்கொளும்பழையகந்தையணிவோரிடத்தும்
கடிநாயெனச்சீறி யெவரையுஞ்சேர்க்காத கன்னிவாழ்மனையிடத்தும்
ததிசேர்கடத்திலுங் கர்த்தபத்திடையிலுஞ் சார்ந்தவாட்டின்றிரளிலும்
சாம்பிணமுகத்திலு மிவையெலாங்கவலைபுரி தௌவைவாழிடமென்பர்காண்
அதிரூபமலைமங்கை நேசனேமோழைதரு மழகனெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௨௧)

(குணகுணமிரண்டினும் பயன்படாதவை.)

குணமற்றபேய்முருங்கைத்தழைதழைத்தென்ன குட்டநோய்கொண்டுமென்
குரைக்கின்றநாய்மடி சுரந்தென்னசுரவாது கொஞ்சமாய்ப்போகிலென்ன
மணமற்றசெம்முருக் கதுபூத்தலர்ந்தென்ன மலராதுபோகிலென்ன
மதுரமில்லாவுவர்க் கடனீர்கறுத்தென்ன மாவெண்மையாகிலென்ன
உணவற்றபேய்ச்சுரை படர்ந்தென்னபடரா துலர்ந்துதான்போகிலென்ன
உதவாதபேர்க்குவெகு வாழ்வுவந்தாலென்னவோங்குமிடிவரிலென்னகாண்
அணியுற்றபைங்கொன்றை மாலிகாபரணனே யாதியேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே, (௨௨)

(குறைவுற்றுங் குணங்கெடாமை.)

தறிபட்டசந்தனக் கட்டைபழுதாயினுஞ் சார்மணம்பழுதாகுமோ
தக்கபால்சுவறிடக் காய்ச்சினுமதுகொண்டு சாரமதுரங்குறையுமோ
நிறைபட்டகதிர்மணி யழுக்கடைந்தாலுமதி னீள்குணமழுங்கிவிடுமோ
நெருப்பிடையுருக்கினு மடிக்கினுந்தங்கத்தி னிறையுமாற்றுங்குறையுமோ
கறைபட்டபைம்புயன் மறைத்தாலுமதுகொண்டு கதிர்மதிகரம்போகுமோ
கற்றபெரியோர்மகிமை யற்பரறிகிலரேனுங் காசினிதனிற்போகுமோ
அறிவுற்றபேரைவிட் டகலாதமூர்த்தியே யையனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ௩)

(இதற்குதவிசெய்வது இதுவெனல்.)

வானவர்பிதிர்கண்முச் சுடர்மூவர்கோள்கட்கும் வாழ்வுதருமுதவிபுவனம்
வளமிக்கபுவனந் தனக்குமேன்மேலுதவி வாழ்வுபெற்றிடுமன்னராம் [ம்
தேனமர்நறுந்தொடையல் புனைமன்னவர்க்குதவி சேர்ந்தகுடிபடைவர்க்கமா
சேர்குடிபடைக்குதவி விளைபயிர்பயிர்க்குதவி சீர்பெறவழங்குமழையாம்
மேனிமிர்மழைக்குதவி மடமாதர்கற்பென்று வேந்தர்தன்னீதியொன் று [ர்
வேதியரொழுக்கமொன் றிம்மூன்றுமேயென்றுமிக்கபெரியோருரைசெய்வா
* ஆனமர்நெடுங்கொடி யுயர்த்தவெம்மிறைவனே யதிபனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ௪)

(இதனைக்கண்டுமகிழ்வது இதுவெனல்.)

தந்தைதாய்மலர்முகங் கண்டுநின்றுவப்ப தவர்தந்தசந்ததியதாம்
சந்த்ரோதயங்கண்டு பூரிப்பதுயர்வாவி தங்குபைங்குமுதமலராம்
புந்திமகிழ்வாயிரவி வருதல்கண்டகமகிழ்வ பொங்குதாமரைமலர்களாம்
போதவும்புயல்கண்டு கண்களித்தேநடம் புரிவதுமயூரவினமாம்
சிந்தைமகிழ்வாயுதவு தாதாவினைக்கண்டு சீர்பெறுவதிரவலர்குழாம்
திகழ்நீதிமன்னனைக் கண்டுகளிகூர்வதிச் செகமெலாமென்பர்கண்டாய்.
அந்தியம்வானனைய செஞ்சடாடவியனே யமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ௫)

(அதுவதுவாகாமை.)

உள்ளன்பிலாதபேர் தித்திக்கவேபேசி யுறவாடுமுறவுமுறவோ
உபசரித்தன்புடன் பரிமாறிடாதசோ றுண்டவர்க்கன்னமாமோ [மோ
தள்ளாதிருந்துகொண் டொருவர்போய்ப்பார்த்துவரு தக்கபயிர்ப்பயிராகு
தளகர்த்தனொருவனில் லாமன்முன்சென்றிடுந் தானையுந்தானையாமோ
விள்ளாதபோகமில் லாதபெண்மேல்வரு விருப்பமும்விருப்பமாமோ
வெகுகடன்பட்டபேர் செய்கின்றசீவனமு மிக்கசீவனமாகுமோ
அள்ளாவிருங்கருணை யாளனேதேவர்தொழு மாதியேயருமைமதவேள்
அனுதினமும்மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ௬)

---

* ஆன் = இடபம்.

## நற்குணங்களுக்கிடனாகாதவர்.

[சே
வெறிகொண்டமர்க்கடம் பேய்கொண்டுகள்ளுண்டு வெங்காஞ்சொறிப்புத
விழ்ந்துதேள்கொட்டிடச் சன்மார்க்கமெள்ளளவுமேவுமோமேவாமைபோ
குறைகின்றபுத்தியா யதிலற்பசாதியாய்க் கூடவேயிளமையுண்டாய்க்
கொஞ்சமாமதிகார முங்கிடைத்தான்மிக்க குவலயந்தனிலவர்க்கு
நிறைகின்றபுத்தியுஞ் சீலமுமேன்மையு நிதானமும்பெரியோர்கண்மேல்
நேசமும்பீகையு மிவையெலாங்கனவிலு நினைவிலும்வராதுகண்டாய்
அறைகின்றசுருதியின் பொருளானவள்ளலே யண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ

## (இசனால்இன்னமுறையனுமெனல்.)

தன்னான்முடிக்கவொண் ணாதகாரியம்வந்து தான்முடிப்போன்றமையனு
தன்றலைக்கிடர்வந்த போதுமிட்டுதவுவோன் றாய்தந்தையென்னலாகும்
ஒன்னார்செயுங்கொடுமை யான்மெலிவுவந்தபோ துதவுவானிட்டதெய்வம்
யுத்திபுத்திகள்சொல்லி மேல்வருங்காரிய முரைப்பவன்குருவென்னலாம்
என்னாளும்வருநன்மை தீமைதனதென்னவேயெண்ணிவருவோன்பந்துவா
இருதயமறிந்துதன் சொற்படிநடக்குமவ னெவனெனினுமவனேசுதன்
அந்நாரமும்பணியு மெந்நாளுமேபுனையு மண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ

## (அவரவரிடத்துநடக்குமுறை.)

மாதாபிதாவினுக் குள்ளன்புடன்கனிவு மாறுதநல்லொழுக்கம்
மருவுகுருவானவர்க் கினியவுபசாரமுள வார்த்தைவழிபாட்டுக்கம்
காதார்கருங்கண்மனை யாடனக்கோசயன காலத்தினயபாஷணம்
கற்றபெரியோர்முதியர் வருமாதுலர்க்கெலாங் கருணைசேரருள்விதானம்
நீதிபெறுமன்னவ ரிடத்ததிகபயவினைய நெறியுடையபேர்க்கிங்கிதம்
நேயமுளதமர்தமக் ககமகிழ்வுடன்பரிவு நேரலரிடத்தில்வயிரம்
ஆதிமனுநூல்சொலும் வழக்கமிதுவாகுமெம தையனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ

## (குணத்தைவிட்டுக் குணத்தைக்கவர்தல்.)

துஷ்டவிகடக்கவியை யாருமேமெச்சுவார் சொல்லுநற்கவியைமெச்சார்
துர்ச்சனர்க்ககமகிழ்ந் துபசரிப்பார்வருந் தூயரைத்தள்ளிவிடுவார் [வா
இஷ்டமுளதெய்வந் தனைக்கருதிடார்கறுப்ப னென்னிலோபோய்ப்பணி
ஈன்றதாய்தந்தையைச் சற்றுமதியார்வேசை யென்னிலோகாலில்வீழ்வார்
நஷ்டலாபங்களுக் குள்ளானபந்துவரி னன்றாகவேபேசிடார்
நாளுமொப்பாரியாய் வந்தபுத்துறவுக்கு நன்மைபலவேசெய்குவார்
அஷ்டதிசைசூழ்புவியி லோங்குகலிமகிமைகா ணத்தனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (ரூ

(குணங்காணுகுறி.)

நற்றோர்களென்பதைச் சிலமுடனே சொலுங் கனவாக்கினாற்காணலாம்
நற்புளாரென்பதைப் பார்க்கின்றபார்வையொடு கானடையினுங்காணலாம்
அற்றோர்களென்பதனை பொன்றிலும்வாரா வடக்கத்தினாலறியலாம்
அறமுளோரென்பதைப் பூததயையென்னுகிலே யதுகண்டுதானறியலாம்
வித்தோங்குபயிரைக் கிளைத்துவருதுடியினால் விளையுமென்றேயறிலாம்
வீரமுடையோரென்ப தோங்கிவருதைரிய விசேஷத்தினாலறியலாம்
அந்தாகுணத்தினாற் குலநலந்தெரியலா மண்ணவேலம்திருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௧)

(கூடிற்பன்யபடல்)

செத்தைபலகூடியொரு கயிறாயின்துகொண்டு திண்கரியையுங்கட்டலாம்
சிறந்தபலதுளிகூடி யாறாயின்வாவியொடு திரளேரிநிறைவிக்கலாம்
ஒத்தநுண்பஞ்சுபல சேர்ந்துநூலாயிடி னுடுத்திடுங்கலையாக்கலாம்
ஓங்கிவருகோலுடன் சிலையுங்கூடினா லுயர்கவிகையாக்கொள்ளலாம்
மற்றுமுயர்தண்டுலத் தோடுதவிடுமிகூடின் மல்குமுளைவிளைவிக்கலாம் [றலாம்
மனமொத்தநேயமொடு கூடியொருவர்க்கொருவர் வாழின்வெகுவெற்றிபெ
அற்றகனியைப்பொருத் தரிபிரமர்தேடரிய வமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௨)

(வெற்றியிடம்.)

லவலாருக்கதிக சயமதுரவாக்கிலே காமுகர்க்கதிகசயமோ
கைப்பொருளிலேவரு மருத்துவர்க்கோசயங் கைவிசேஷந்தன்னிலே
நலமுடையவேசையர்க் கழகிலேயரசர்க்கு நாளும்ரணசூரத்திலே
நற்றவர்க்கதிகசய முலகுபுகழ்பொறையிலே ஞானவேதியர்தமக்கோ
குலமகிமைதன்னிலே வைசியர்க்கோசயங் கூறியதுலாக்கோலிலே
குற்றமில்லாதவே ளாளருக்கோசயங் குறையாதகொழுமுனையிலே
அலைவில்குதிரைக்குநடை வேகத்திலதிகசய மாமென்பரருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௩)

(ஒன்றனில்லாமையாற்பாழ்படல்)

தாம்பூலதாரண மிலாததேல்வருபூர்ண சந்த்ரநிகர்முகஞ்சூனியம்
சற்சனரிலாததேல் வெகுசனஞ்சேர்ந்துவாழ் தரும்பெரியநகர்சூனியம்
மேம்பாடிலாதமன் னவர்கள்வந்தாள்வதேல் மிக்கதேசஞ்சூனியம்
மிக்கசற்புத்திர னிலாததேல்நலமான வீறுசேர்கிரகசூனியம்
சோம்பாததலைவரில் லாததேல்வளமுடன் சொல்லுயர்சபாசூனியம்
தொல்லுலகிலெவர்க்கு மாநிதியமில்லதேல் சுத்தசூனியமென்பர்காண்
*ஆம்பல்வதனத்தனைக் குகனையீன்றருள்செய்த வத்தனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௪)

---

*ஆம்பல் — யானை.

(மூடர் தாரதம்மியம்.)

வெண்புத்திகேட்கின்ற மூடருந்தந்தைதாய் பிழைபுறஞ்சொலுமூடரும்
பெரியோர்கள்சபையிலே முகடேறிவந்துது பிதற்றிடும்பெருமூடரும்
பண்புற்றசுற்றஞ் சிரிக்கவேயிழிவான பழிதொழில்செய்திடுமூடரும்
பற்றற்றபேர்க்குமுன் பிணைநின்றுபின்புபோய்ப் பரதவித்திடுமூடரும்
கண்கெட்டமாடென்ன வோடியிரவலர்மீது காய்ந்துவீழ்ந்திடுமூடரும்
கற்றறிவிலாதமுழு மூடருக்கிவரெலாங் கான்மூடரரைமூடர்காண்
அண்கற்றநாவலர்க் காகவேதூதுபோ மையனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫௫)

(இதற்கு இது வேண்டுமெனல்.)

தனக்குவெகுபுத்தியுண் டாகினும்வேறொருவர் தம்புத்திகேட்கவேண்டும்
தானதிகசூரனே யாகினுங்கூடவே தளசேகரங்கள்வேண்டும்
கனக்கின்றவித்துவா னாகிலுந்தன்னிலுங் கற்றோரைநத்தவேண்டும்
காசினியையொருகுடையி லாண்டாலும்வாயிலிற் கருத்துள்ளமந்திரிவேண்டும்
தொனிக்கின்றசங்கீத சாமர்த்தியனாகிலுஞ் சுதிகூட்டவொருவன்வேண்டும்
சுடர்விளக்காயினும் நன்றாய்விளங்கிடத் தூண்டுகோலொன்றுவேண்டும்
அனற்கண்ணனேபடிக சங்கநிகர்வண்ணனே யையனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫௬)

(வறுமையின் கொடுமை)

மேலானஜாதியி லுதித்தாலுமதிலென்ன வெகுவித்தைகற்றுமென்ன
மிக்கவதிரூபமொடு சற்குணமிருந்தென்ன மிகுமானியாகிலென்ன
பாலானமொழியுடைய னாயென்னவாசார பரனாயிருந்துமென்ன
பார்மீதுவீரமொடு ஞானவானாயென்ன பாக்கியமிலாதபோது
வாலாயமாய்ப்பெற்ற தாயுஞ்சலித்திடுவள் வந்தசுற்றமுமிகழுமே
மரியாதையில்லாம லனைவரும்பேசுவார் மனைவியுந்தூறுசொல்வாள்
ஆலாலமுண்டகனி வாயனேநேயனே யனகனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫௭)

(ஈனத்துவம்.)

இரப்பவன்புவிமீதி லீனனவனுக்கில்லை யென்னுமவனவனிலீனன்
ஈகின்றபேர்தம்மை யீயாமலேகலைத் திடுமூடனவனிலீனன்
உரைக்கின்றபேச்சிலே பலனுண்டெனக்காட்டி யுதவிடானவனிலீனன்
உதவுதேவர்க்குரைத் தில்லையென்றேசொலு முலுத்தனேயவனிலீனன்
பரக்கின்றயாசகர்க் காசைவார்த்தைகள்சொலிப் பலகாலலைந்துதிரியப்
பண்ணியேயில்லையென் றிடுகொடியபாவியே பாரிலெல்லோர்க்குமீனன்
அரக்கிதழ்க்குமுதவா யுமைநேசனேயெளிய ரமுதனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫௮)

(மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்.)

சென்மித்தவருஷமும் முண்டானவர்த்தமுந் திதில்கிரகச்சாரமும்
தின்றுவருமௌஷதமு மேலானதேசிகன் செப்பியமகாமந்த்ரமும்
புன்மையவமானமும் தானமும்பைம்பொனணி புனையுமடவார்கலவியும்
புகழ்மேவுமானமும் மிவையொன்பதுந்தமது புந்திக்குளேவைப்பதே
தன்மமென் றுணாசெய்வ ரொன்றூர்கருத்தையுந் தன்பிணியையும்பசியையும்
தான்செய்தபாவமுமிவையெலாம்வேறொருவர் தஞ்செவியில்வைப்பதியல்பா [ம்
அன்மருவுகண்டனே மூன்றுலகுமீன்றவுமை யன்பனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௬௯)

(தேவர்கள்காலவளவை.)

சதுரயுகமோரிரண் டாயிரம்பிறப்படிற் சதுர்முகற்கொருதினமதாம்
சாற்றுமித்தினமொன்றி லேயிந்த்ரபட்டங்க டாமுமீரேழ்சென்றிடும்
மதிமலியுமித்தொகையி னயனுயுளூறுபோய் மாண்டபோதொருகற்பமாம்
மாறிவருகற்பமொரு கோடிசென்றானெடிய மால்தனக்கோர்தினமதாம்
துதிபரவுமித்தொகையி லொருகோடிநெடியமால் தோன்றியேபோய்மறைந்
தோகையோர்பாகனே-நீநகைத்தணிமுடி துளக்கிடுங்காலமென்பார் [தால்
அதிகமுளபலதேவர் தேவனேதேவர்கட் கரசனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௰)

(தூய்மையிடமும் தூய்மைசெய்வனவும்.)

வாம்பரிதனக்கதிக புனிதமுகமதனிலே மறையவர்க்குயர்புனிதமோ
மலரடியிலேபுனித மொளிகொள்கண்ணாடிக்கு மாசின்முற்புறமதனிலே
மேம்படும்பசுவினுக்குப் பின்னூறுபுறத்திலே மிக்கமடமாதருக்கோ
மேனியெல்லாம்புனித மாகுமாசௌசமொடு மேவுவனிதையர்தமக்கும்
தாம்பிரமதற்குமிகு வெள்ளிவெண்கலமயந் தங்கமீயந்தமக்கும்
தரும்புனிதம்வருபெருங் கொடுபுளிசுணஞ்சாம்பல் சாருமண் * தாதுசாணம்
ஆம்புனிதமிவையென்பர் மாமேருவில்லியே யனகனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௧)

(அடங்காதவற்றை அடக்குமுபாயம்.) [ள்வார்

கொடியபொலியெருதையிரு மூக்கிலுங்கயிறென்று கோத்துவசவிர்த்திகொ
குவலயந்தனின்மதக் களிறதனையங்குசங் கொண்டுவசவிர்த்திகொள்வார்
படியில்விஷவரவைமந் திரதந்திரத்தினாற் பற்றிவசவிர்த்திகொள்வார்
பாய்பரியைநெடியகடி வாய்வடங்கொடுநடை பழக்கிவசவிர்த்திகொள்வார்
விடமுடையதுஷ்டரைச் சேர்பந்தமதுகொண்டு வீசிவசவிர்த்திகொள்வார்
மிக்கபெரியோர்களுங் கோபத்தையறிவால் விலக்கிவசவிர்த்திகொள்வார்
அடியவர்துதிக்கவரு செந்தாமரைப்பதத் தையனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௨)

---

* தாது = காவிமண்.

(ஒளியினுயர்வு.)

செழுமணிக்கொளியதன் மட்டிலேயதினுமோ செய்யகச்சோதமெனவே
செப்பிடுங்கிருமிக்கு மிச்சமொளியதனினுந தீபத்தினொளியதிகமாம்
பழுதிலாத்தீவத்தி தீபத்தினதிகமாம் பகல்வத்தியதிலதிகமாம்
பாரமத்தாப்பினொளி யதிலதிகமதிலுமோ பனிமதிக்கொளியதிகமாம்
விழவுதருபரிதிக்கு மனுநீதிமன்னர்க்கும் வீர * விதரணிகருக்கும் [வார்
மிக்கவொளிதிசைதொறும் போய்விளங்கிடுமென்னவிரகுளோருரைசெய்கு
அழல்விழிகொடெரிசெய்து மதவேடனைவென்ற வண்ணலேயருமைமத
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. [வேள்

(குணங்குற்றமாதல்.)

வான்மதியைநோக்கிடிற் சோரர்காமுகருக்கு மாறுதவல்விஷமதாம்
மகிழ்நன்றனைக்காணி விதமிலாவிபசரிய மாதருக்கோவிஷமதாம்
மேன்மைதருநற்சுவை பதார்த்தமுஞ்சுரரோக மிக்கபேர்க்கதிகவிஷமாம்
வித்தியாதிபர்தமைக் கண்டபோததிலோப வீணர்க்கெலாம்விஷமதாம்
ஈனமிகுபுன்கவிவ லோர்க்கதிகசபைகாணி லேலாதகொடியவிஷமாம்
ஏற்றமில்லாதபடு பாவிகட்கறமென்னி லெந்நாளுமதிகவிஷமாம்
ஆனதவயோகியர்க ளிதயதாமரையுறையு மண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௪)

(உயர்வின்றித்தாழ்வும் சிறக்குமிடம்)

வெகுமானமாகிலும் அவமானமாகிலு மேன்மையோர்செய்யிலழகாம்
விரகமேயாகிலுஞ் சரசமேயாகிலும் விடமங்கைசெய்யிலழகாம்
தருதாழ்வுவாழ்வுவெகு தருமங்களைச்செய்து சாரிலோபேரழகதாம்
சரீரத்திலோருன மானமெதுவாகிலுஞ் சமர்செய்துவரிலழகதாம்
நகமேவுமதகரியி லேறினுந்தவறினு நாளுமதுவோரழகதாம்
நாய்மீதிலேறினும் வீழினுங்கண்டபேர் நகைத்தழகன்றென்பகாண்
அகமாயநற்றவர்க் கருள்புரியுமையனே யாதியேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௫)

(நல்வினைசெய்தோர்.)

சரணெனக்காத்தவன் மெய்யினால்வென்றவன் றனமிளையாதுதவினோன்
தந்தைசொன்மறுதவன் முன்னவற்கானவன் றாய்பழிதுடைத்தநெடியோன்
வருபிதிர்க்குதவினோன் றெய்வமேதுணையென் றுமைந்தன்மனைவியைவதைத்
தோர், மாறானதந்தையைத் தமையனைப்பிழைகண்டு மாய்த்தலின்மகிமை
பெற்றோர், கருதரியசிபியரிச் சந்திரன்மாபலிக ணிச்சியோன்சுமுத்திரைசுத
ன், கருடன்பகீரத னுடன்சிறுத்தொண்டனொடு † கருதுபுலிபிரகலாதன்
அரியவல்விபூஷண னெனுமகாபுருஷரா மத்தனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௬)

---

* விதரணிகர் = விவேகிகள். † கருதுபுலி = சோட்டுபுலி.

(தீவினைசெய்தோர்)

வாயிகழ்வுபேசிமிகு வாழ்விழந்தோன்சிவனை வைதுதன்றலைபோயினோன்
மற்றொருவர்தாரத்தி லிச்சைவைத்துடலெலா மாறுதவடுவாயினோன்
தாயத்தினோர்க்குள்ள பங்கைக்கொடாமலே சம்பத்திழந்துமாய்ந்தோன்
தக்கபெரியோர்தமை வணங்காமதத்தினாற் றந்திவடிவாயலைந்தோன் [தோன்
மாயனைச்சபையதனி னிந்தனைசெய்தொளிகொணவ மணிமுடிதுணிந்துமாய்ந்
வருமகிடனொடுதக்க னயிராவதன்குருடன் மகன்வழுதிசிசுபாலனும்
ஆயுமறிவாளரொடு தேவர்பணிதாளனே யவனிபுகழருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௭)

(நன்னகர்)

வாவிபலகூபமுட னாறுகுசேர்வதாய் மலைகாதவழியினுளதாய் [தாய்
வாழைகமுகொடுதெங்குபயிராவதாய்ச்செந்நெல் வயல்கள்வாய்க்கால்களுள
காவிகமலங்குவளை சேரேரியுள்ளதாய்க் கனவர்த்தகர்மறைவலோர்
காணரியபலகுடிக ணிறைவுள்ளதாய்நல்ல காவலனிருக்கையுளதாய்த்
தேவராலயமாடல் பாடலணிமாளிகை சிறக்கவுளதாய்ச்சற்சனர்
சேருமிடமாகுமோரூர்கிடைத்ததிலதிக சிவனமுமேகிடைத்தால்
ஆவலோடிருந்திடு வதேசொர்க்கவாசமென் றறையலாமருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௮)

(தீநகர்.)

சனஜாதிகள்குடி யிருப்பதாய்முள்வேலி யில்லில்லினுக்குமுளதாய்
இணைமுலைதிறந்துதந் தலைவிரித்திடுமாத ரெங்குநடமாட்டமுளதாய்க்
கானமொருபக்கமாய் மலையோரமாய்முறைக் காய்ச்சல்தப்பாதவிடமாய்க்
கள்ளர்பயமாய்நெடிய கயிறிட்டிறைக்கின்ற கற்கேணிநீருண்பதாய்
மானமில்லாக்கொடிய பார்ச்சனத்திற்கேற்ற மணியமொன்றுண்டானதாய்
மாநிலத்தோர்தல மிருந்ததனில்வெகுவாழ்வு வாழ்வதிலுமருநரகிலே
ஆனநெடுநாள்கிடர் தமிழ்தலேசுகமாகு மமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௪௯)

(முழுக்குநாள்)

வருமாதிவாரந்தலைக் கெண்ணெயாகாது வடிவமிகுவழகுபோகும்
வளர்திங்களுக்கதிக பொருள்சேருமங்கார வாரந்தனக்கிடர்வரும்
திருமேவுபுதனுக்கு மிகுபுத்திவந்திடுஞ் செம்பொனுக்குயரறிவுபோம்
தேடியபொருட்சேத மாம்வெள்ளிசனியெண்ணெய் செல்வமுண்டாயுளுண்
பரிகாரமுளதாதிவாரந் தனக்கலரிபௌமனுக்கானசெழுமண் [டாம்
பச்சறுகுபொன்னவற் காமெருத்தாளொளிப் பார்க்கவற்காகுமெனவே
அரிதாவதிந்தபே ரெண்ணெய்சேர்த்தேமுழுக் காடுவா ரருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫௰)

(மருத்துவன்)

தாதுப்பரீக்ஷைவரு காலதேசத்தொடு சரீரலக்ஷணமறிந்து
தன்வந்திரிகும்பமுனி தேரையர்கொங்கணசித்தர் தமதுவாகடமறிந்து
பேதப்பெருங்குளிகை சுத்திவகைமாத்திரைப் பிரயோகமோடுபஸ்மம்
பிழையாதுமண்டூர செந்தூரபக்ஷணம் பேர்பெறுங்குணவாகடம்
சோதித்துமூலிகா விதநிகண்டுங்கண்டு தூயனுதலம்லேகியம்
சொல்பக்குவங்கண்டு வருரோகநிண்ணயந் தோற்றியேயமிர்தகரமாய்
ஆதிப்பெருங்கேள்வி யுடையனாயுள்வேத னாகுமெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫௧)

(உண்மையுணர்குறி.)

சோதிடம்பொய்யாது மெய்யென்பதறிவரிய சூழ்கிரகணஞ்சாக்ஷியாம்
சொற்பெரியவாகட நிசமென்கைபேதிதரு தூயமாத்திரைசாக்ஷியாம்
ஆதியிற்செய்ததவ முண்டில்லையென்பதற் காளடிமையேசாக்ஷியாம்
அரிதேவதேவனென் பதையறியமுதனார் லரிச்சுவடியேசாக்ஷியாம்
நாதனேமாதேவ னென்பதற்கோருத்ர * நமகசமகஞ்சாக்ஷியாம்
நாயேனைரக்ஷிப்ப துன்பாரமரியய னாளுமர்ச்சனைசெய்சரணத்
தாதிநாயகனீயிக்கீ வேதநாயகனான வண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௨)

(பிறவிக்குணமாறுமை.)

கலங்காதசித்தமுஞ் செல்வமுஞ்ஞானமுங் கல்வியுங்கருணைவிளைவும்
கருதரியவடிவமும் போகமுந்தியாகமுங் கனரூபமுளமங்கையும்
அலங்காதவிரமும் பொறுமையுந்தந்த்ரமு மாண்மையுமமுதமொழியும்
ஆனவிச்செயலெலாஞ் செனனவாசனையினா லாகிவருமன்றிநிலமேல்
நலஞ்சேருமொருவரைப் பார்த்ததுபெறக்கருதி னன்னுமோரஸ்தாளிதன்
நற்சுவைதனக்குவர வேம்புதவமேநெடிது நாள்செயினும்வாராதுகாண்
அலங்காரமாகமலர் கொன்றைமாலிகைசூடு மண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௩)

(ஊழ்வலி.)

கடலளவுரைத்திடுவ ரரிபிரமருருவமுங் காணும்படிக்குரைசெய்வார்
காசினியினளவுபிர மாணமதுசொல்லுவார் காயத்தினிலைமையறிவார்
விடலரியசீவனிலை காட்டுவார்மூச்சையும் விடாமற்றடுத்தடக்கி
மேன்மேலும்யோகசா தனைவிளைப்பாரொட்டி விண்மீதிலுந்தாவுவார்
தொடலரியபிரமநிலை காட்டுவாரெண்வகைத் தொகையானசித்தியறிவார்
சூழ்வினைவரும்பொழுது சிக்கியுழல்வாரது தடைக்கவொருநான்முகற்கும்
அடைவலவெனத்தெரிந் தளவில்பலநூல்சொல்லு மண்ணலேயருமைமதவே
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௫௪) [ள்

---

* நமகசமகம் = ஓர்மந்திரம்.

(ஒப்புயாவில்லாதவை.)

வேதியர்க்கதிகமாஞ் சாதியுங்கனகமக மேருவுக்கதிகமலையும்
வெண்டிரைதொழித்துவரு கங்காநதிக்கதிக மேதினியிலோர்நதியும்
சோதிதருமாதவற் கதிகமாங்காந்தியுஞ் சூழ்கனற்கதிகசுசியும்
தூயதாய்தந்தைக்கு மேலானதெய்வமுஞ் சுருதிக்குயர்ந்தகலையும்
ஆதிவடமொழிதனக் கதிகமாமொழியுநுக ரன்னதானந்தனிலுமோர்
அதிகதானமுமில்லை யென்றுபலநூலெலா மாராய்ந்தபேருரைசெய்வார்
ஆதவன்பிரமன்விண் ணவர்முனிவர்பரவவரு மண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௫)

(வீண்செயல்.)

வேட்டகஞ்சேர்வோரும் வீணரோவீணுரை விரும்புவோரவரின்வீணர்
விருந்துகண்டில்லாள் தனக்கஞ்சியோடிமறை விரகிலோரவரின்வீணர்
நாட்டந்தருங்கல்வி யில்லோருவீணரே நாடியவர்மேற்கவிசொல்வார்
நானிலந்தனில்வீண ரவரினும்வீணரே நரரைச்சுமக்குமொர்சுமட்டர்
தேட்டறிவிலாதபெரு வீணரேயவரினுஞ் சேரொருவரர்த்தமீசர்ச்
செலவுசெய்வோரதிக வீணராம்வீணுய்த் திரியுமெளிதேரூருட்கொண்
டாட்டஞ்செயும்பதாம் புயமுடியின்மேல்வைத்த வமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௬)

(உதவியின்றிக்கெடுவன.)

மூப்பொருவரில்லாத குமரிகுடிவாழ்க்கையு முதரனிலாதநகரும்
மொழியும்வெகுநாயகஞ் சேரிடமும்வருமெதுகை மோனையில்லாதகவியும்
காப்பமைவிலாததேர் நந்தவனமும்நல்ல கரையிலாநிறையேரியும்
கசடறக்கற்காத வித்தையுமுபதேச காரணனிலாததெளிவும்
கோப்புளவிநோதமுடை யோரருகுபசரிக்காதகோதையர்செய்கூத்தாட்டமும்
குளிர்புனனிறைந்துவரு மாற்றோரமதினின்று கோடுயர்ந்தோங்குதருவும்
ஆப்பதில்லாததேரிவையெலாமொன்றுக்கு மையனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫எ)

(இவையேபோதுமெனல்.)

பொய்யாதவாய்மையுஞ் சீலமுஞ்சார்ந்துளோர் பூவலஞ்செயவேண்டுமோ
பொல்லாதகொலைகளவி லாதநன்னெறியுளோர் புகழறஞ்செயவேண்டுமோ
நையாதகாமத்தை லோபத்தைவிட்டபேர் நல்லறஞ்செயவேண்டுமோ
நன்மனசுத்தியுண் டானபேர்மேலுமொரு நதிபடிந்திடவேண்டுமோ
மெய்யாநின்னடியரைப் பரவுவோருன்பதம் விரும்பிவழிபடவேண்டுமோ
வேதியர்தமைப்பூசைபண்ணுவோர்வானவரைவேண்டியர்ச்சனைசெய்வரோ
ஐயாறுடன்கமலை சோணாசலந்தில்லை யதிபனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫அ)

(அரியராமிவர்.)

பதின்மரிலொருத்தர்சபை மெச்சிடப்பேசுவோர் பாடுவோராயிரத்தொருவர்
பார்மீதிலாயிரத் தொருவர்விதிதப்பாது பாடிப்ரசங்கமிடுவோர்
இதனருமையறிகுவோர் பதினுயிரத்தொருவ ரிதையறிந்திதயமகிழ்வா
யீகின்றபேர்புவியி லேயருமையாகவே யிலக்ஷத்திலேயொருவராம்
அதிபெருகவருமூன்று காலமுமறிந்தமெய்த் தாயர்கோடியிலொருவராம்
தொலதுலகுபுகழ்காசி யேகாம்பரங்கைலை சூழுமவஞசிபேரூர்
அதிசமுளவெண்காடு செங்காடுகாளத்தி யத்தனேயருமைமதவேள.
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௯)

(கற்புமேம்பாடு.)

தன்கணவனுருவமாய்த் தற்புணரவந்தோன் றன்கிணங்காதநிறையாள்
தழற்கதிரெழாமலும் பொழுதுவிடியாமலுஞ் சாபங்கொடுத்தசெயலாள
மன்னிவளநூழன்மூழ்கி யுலகறியவேதனது மகிழ்நனைச்சேர்ந்தபரிவாள்
மைந்தனை தேடவந்த வமையத்துநாயகன் வாண்மாலையாணகனிவாள
நன்னதிபதிசிவ தென்னவாரழன்மூழ்கி நாயகனைமேவுதயவாள்
நானிலம்புகழ்சாவி பேர்பெறுநளாயினி நளினமலர்மேல்வைதேகி
அன்னமெனவருசந்த்ர மதிதுரௌபதியென்ப ராதியேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௰)

(கோடியுடுக்குநாள்.)

கறைபடாதொளிசேரு மாதிவாரந்தனிற் கட்டலாம்புதியசிலை
கலைமதிக்காகாது பலகாலுமழையினிற் கடிதாநனைவுற்றெழுதரும்
குறைபடாதிடர்வரும் வீரியம்போமரிய குருதிவாரந்தனகருக்
கொஞ்சநாளிற்கிழியும் வெற்றிபோம்புந்தியிற் குருவாரமதிலணிந்தால்
மறைபடாதழகுண்டு மேன்மேலுநல்லாடை வருமினியசுக்கிரற்கோ
வாழ்வுண்டுதிருவுண்டு பொல்லாதசனியற்கு வாழ்வுபோமரணமுண்டாம்
அறைகின்றவேதாக மத்தின்வடிவாய்விளங் கமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௧)

(சகுனம்

சொல்லரியகருடன்வா னரமரவமூஞ்சூறு சூகரங்கீரிகலைமான்
துய்யபாரத்வாச மட்டைபெலிபுன்கூகை சொற்பெருகமருவுமாங்கை
வெல்லரியகரடிகாட் டானைபூனைபுலிமேல் விளங்குமிருநாவுடும்பு
மிகவுரைசெயிவையெலாம் வலமிருந்திடமாகில் வெற்றியுண்டதிகநலமாம்
ஒல்லையில்வழிப்பயண மாகுமவர்தலைதாக்க லொருதொடையிருத்தல்பற்றல்
ஒருதும்மலாணையிட் டிருமல்போகேலென்னவுபசுருதிச்சொல்லிவையாலாம்
அல்லறருநல்லவல வென்பர்முதியோர்பரவு மமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே, (௬௨)

(இதுவுமது.)

கரிமயில்பாங்கிளிளை கோழிகொக்கொடுகாக்கை நாவிசிச்சிலியோந்திதான்
கரையான்கடுத்தவாய்ச் செம்போத்துடன்மேதி நாடரியசுரபிமறையோர்
வரியுழுவைமுயலிவை யனைத்தும்வலமாயிடின் வழிப்பயணமாகைநன்றாம்
மற்றுமினவையன்றிபேருதிரையனுமானித்தல்வாய்ச்சொல்வாவாவென்றிடல்
தருவலந்தொனித்திடுதல்கொம்பு*கிடுமுடி முரசுதப்பட்டையொலியல்வேட்டு
தனிமணிமுழக்கெழுத லிவையெலாம்ஊர்வழி தனக்கேகநன்மையென்பார்[த்
அருணகிரணோதயத் தருணபானுவையனைய வண்ணலேயருணமந்தவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௩)

(இதுவுமது)

தலைவிரித்தெதிர்வருத லொற்றைப்பிராமணன் றவசிசன்னாசிதட்டான்
தனமிலாவெறுமார்பி மூக்கறைபுல்விறகுதலை தட்டைமுடிமொட்டைத்தலை
கலன்கழிமடந்தையர் குசக்கலஞ்செக்கான் கதித்ததிலதைலமிவைகள்
காணவெதிர்வரவொணா நீர்க்குடமெருக்கூடைகனிபுலாலுடையமறையோர்
நலமிகுசுமங்கலை கிழங்குளுந்தகமங்கை நாளும்வண்ணானழுக்கும்
நசைபெருகுபாற்கலச மணிவிளையன்மலரிவைக ளெதிர்வரநன்மையாம்
அலைகொண்டகங்கைபுனை வேணியாய்பரசணியு மண்ணலேயருணமந்தவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௪)

(உணவில்விலக்கு.)

கைவிலக்குக்கொளும் பாலசப்பால்வருங் காராக்கறந்தவெண்பால்
காளான்முருங்கைசுரை கொம்மட்டிபழஞ்சோறு காந்திக்கரிந்தசோறு
செவ்வையில்சிறுகீரை பீர்க்கத்திவெள்ளுப்புத் தென்னைவெல்லமலாவகம்
சீரிலாவெள்ளுள்ளி யீருள்ளியிங்கினொடு சிறப்பில்வெண்கத்தரிக்காய்
எவ்வமில்சிவன்கோயி னிர்மாலியங்கிரண மிலகுசுடரில்லாதவூண் [ள்
இவையெலாஞ்சிலமுடையோர்களுக்காகா வெனப்பழையநூலுரைசெயும்
ஐவகைப்புலன்வென்றமுனிவர்விண்ணவர்போற்று மமலனேயருணமந்தவே
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௫)

(நரபொருளிற்குற்றம)

பேரானசங்கா நதிக்குமதன்மேல்வரும் பேனமேதோஷமாகும்
பெருகிவளர்வெண்மதிக் குள்ளுட்களங்கமே பெரிதானதோஷமாகும்
சீராந்தபோதனார்க் கொருவர்மேல்விருகின்ற சீற்றமேதோஷமாகும்
திண்முடிமன்னவர் விசாரித்திடாதொன்று செய்வதவர்மேற்றோஷமாம்
தாராளமாமிகத் தந்தவோர்தாராளமை தானிரப்போர்தோஷமாம்
சாரமுளநற்சுருப் பஞ்சாறுகைப்பதவர் தாலஞ்செய்தோஷமாகும்
நூராயுமொருநான் மறைக்குமெட்டாதொளிரு மண்ணலேயருணமந்தவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௬)

* கிடுமுடி — இரட்டைப்பறை.

(மனைகோலவுதற்குமாதம்)

சித்திரைத்திங்கடனின் மனைகோலமொளுகச் செல்வமுண்டுவிருகலமே
சேரும்வைகாசிக்கு மேஞளரன்புரந் தியிட்டதானியாகா
வெற்றிகொளிராகவன் றேவிசிறைசேர்கடகம் விறல்லவாவணிசுகம்
மேய்டுங்கன்னியிர னியன்மாண்டதாகாது மேன்மையுண்டைப்பசிக்கே
உத்தமங்கார்த்திகைக் காகாதுமார்கழிபி லோங்குபாரதம்வர்தகாள்
உயர்வுண்டுமகரத்தின்மாசிமாதத்தில்விடமும்பர்கோனுண்டதாகா
தத்தனீமாரனை யெரித்தபங்குனிதானு மாகுமோவருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (ருஎ)

(விருந்துவாரம்.)

செங்கதிர்க்குறவுபோம்பகைவரும்விருந்தொருவர் செய்பொருதன்றேனு
திங்களுக்குறவுண்டு நன்மையாம்பகைவருஞ் செவ்வாய்விருந்தருந்தார் [அ
பொற்குபுதநன்மையுண் டுறவாம்விருந்துணைப் பொன்னவற்கதிகமுகையாம்
புகரவற்காகிலோ நெடுநாள்விரோதமாய்ப்போன்வுறவுந்திரும்பும்
மந்துனிகர்சனிவார நல்லதாமிதனினு மன்பெடுத்திருந்தவிட்டமே
வாசியமாய்ந்தோய் விருந்துணவிருந்துதவ வாய்த்தநாளென்றறியலாம்
அங்கையில் பெருசந்நீர் துங்கமழுவாளனேயண்ணலே யருமைமதவேள்
அனுதின தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (ருஅ)

பூப்புவாரம்.

அருக்கனுக்கதிரோகி யாவணற்சோமனுக் கானகற்புடையளாவள்
அங்காரகற்குவெகு துக்கியாவாள்புர்திய ளவில்லைபைங்குழவிபெறுவாள்
திருத்தகுவியாழத்தின் மிக்கசம்பத்தினொடு சிறுவரைப்பெற்றெடுப்பாள்
சீருடையபார்க்கவற் சதிபோகவதியுமாந் திருவுமுண்டாயிருப்பாள்
கருத்தழிந்தெழில்குன்றி வறுமைகொண்டலைகுவள் காரிவாரத்திலாகில்
களபமுலைமடமாதர் புஷ்பவதியாம்வாரகால பலனென்றுரைசெய்வார்
அருத்தியுடனெளியேனை யாட்கொண்டசோதியேயண்ணலேயருமைமதவே
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (ருகு) [ள்

(பூப்புலக்னம)

வறுமைதப்பாதுவரு மேடத்திலிடபத்தின் மாறுதலியபிசாரியாம்
வாழ்வுண்டுபோகமுண் டாகுமிதுனங்கடகம் வலிதினிற்பிறரையணையாா
சிறுமைசெயுமிடிசேர்வன் மிருகேந்திரற்கெனிற் சீர்பெறுவள்கன்னியென்
னில், சேட்டுடையடுலையெனிற் பிணியான்மெலிந்திடுவ டேளினுக்குத்தனுசி
நெறிசிதைவள்பூருவத் தபரநெறியுடையளா நீண்மகரமானமிலளாம் [னில்
கிறைபோகவதிகும்ப மெனின்மீனமென்னிலோ நெடியபேரறிவுடையளாம்
அறிவாளர்மடமாதர் தமைபறியிராசிபல னதுவென்பாருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௰)

(தீவுங்கடலும்)

நாவலந்தீவினைச் சூழ்தருங்கடலளவு லக்ஷம்யோசனையிதனையே
நாடொறுஞ்சூழ்வதி லவந்தீவதைச்சூழ்த னற்கழைச்சாற்றின்கடல்
மேவுமிதுசூழ்வதுகு சத்தீவதைச்சூழ்தன் மிகுமதுக்கடலதனையே
விழைவொடுஞ்சூழ்தல்கிர வுஞ்சத்தீவமிதனின் மேற்சூழ்தனெய்க்கடலதாம்
பூவிலிதுசூழ்தல்சா கத்தீவமிங்கிதைப் போர்ப்பதுதிருப்பாற்கடல்
போதவதுசூழ்தல்சான் மலித்தீவமாந்தயிர்ப் புணரியப்பாலுமப்பால்
ஆவலுறுபுட்கரத் தீவாமிதைச்சூழ்வ தரும்புனநீருமருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (எக)

(மேலானபொருள்கள்.)

சுழிசுத்தமாயிருந் ததிலும்பண்டைக்கான துரகமோர்மாணிக்கமாம்
சூழ்புவிக்கரசனு யதிலேவிவேகமுள துரையுமோர்மாணிக்கமாம்
பழுதற்றவதிரூப வதியுமாய்க்கற்புடைய பாவையோர்மாணிக்கமாம்
பலகலைகள்கற்றறி யடக்கமுளபாவலன் பார்க்கிலோர்மாணிக்கமாம்
ஒழிவற்றசெல்வனு யதிலேதியாகியா முதனோர்மாணிக்கமாம்
உத்தமகுலத்துதித் ததிலுமோமெய்ஞ்ஞான முடையனோர்மாணிக்கமாம்
அழிவற்றவேதாக மத்தின்வடிவாய்விளங் கமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (எஉ)

(உண்டியிலையும் முறையும்.)

வாழையிலைபுன்னைபுர சுடனற்சுருக்கத்தி மூலபலாத்தெங்குபன்னீர்
மாசிலமுதுண்ணலா முன்னுதவோவரசு வனசனுசெழும்பாடலம்
தாழையிலையத்தியா லேரண்டபத்திரஞ் சகதேவமுண்முருக்குச்
சாருமிவையன்றிவெள் ளெருக்கிச்சியிலை தனிலுமுண்டிடவொணாதால்
தாழ்விலாச்சிற்றுண்டி நீரடிக்கடிபருகல் சாதங்கள்பலவருந்தல்
சற்றுண்டன்மெத்தவூ ணித்தனையுமெய்ப்பிணி தனக்கிடமெனப்பருகிடார்
அழிபுடைசூழுலகில் வேளாளர்குலதிலக னருமைமதருனமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (எ௩)

(கவிஞர்வறுமை.)

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை யிணையிலாச்சேஷனென்றும்
ஈவதில்லாதகன லோபியைச்சபையதனி லிணையிலாக்கர்ணனென்றும்
அழகற்றவெகுகோர ரூபத்தையுடையோனை யதிவடிவமாரனென்றும்
ஆயுதமெடுக்கவுந் தெரியாதபேடிதனை யாண்மைமிகுவிஜயனென்றும்
முழுவதும்பொய்சொல்லி யலைகின்றவஞ்சகனை மொழியரிச்சந்த்ரனென்றும்
மூதுலகிலிவ்வணஞ் சொல்லியேகவிராஜர் முறையின்றியேற்பதென்னோ
அழலெனவுதித்தவரு விஷமுண்டகண்டனே யமலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (எச)

(கவிஞன்)

தெள்ளமிர் தத்தாரையென மதுரங்கதித்தடைந் தேன்மடைதிறந்ததெனவே
செப்புமித்தமிழினொடு நாற்கவிதைநாற்பொரு டெரிந்துரைசெய்திறமையு
விள்ளரியகாவியத் துட்பொருளிலங்காரம் விரியிலக்கணவிகற்பம் [வே
வேறுமுளதொன் னூல் வழக்கமுலகத்தியல்பு மிக்கபிரபந்தவண்மை
உள்ளவெல்லாமறிந் தலையடங்குங்கடலை யொத்ததிகசபைகண்டபோ
தோங்கலையொலிக்கின்ற கடல்போற்பிரசங்கம துரைப்பவன்கவிஞனாகும்
அள்ளிவிடமுண்டகனி வாயனேநேயனே யமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௫)

(நற்சார்வு.)

காணரியபெரியோர்க டெரிசனலபிப்பதே கண்ணிணைகள்செய்புண்ணியம்
கருணையாயவர்சொன்மொழி கேட்டிடலபிப்பதிரு காதுசெய்திடுபுண்ணியம்
பேணியவர்புகழையே துதிசெயலபித்திடுதல் பேசில்வாய்செய்புண்ணியம்
பிழையாமலவர்தமைத் தொழுதிடலபிப்பதுகை பெரிதுசெய்திடுபுண்ணியம்
வீணறிசெலாமலவர் பணிவிடை லபிப்பதுதன் மேனிசெய்திடுபுண்ணியம்
விழைவொடவர்சொற்படி நடந்திடலபிப்பதே மிக்கபூருவபுண்ணியம்
ஆணவமெனுங்களை களைந்தறிவினைத்தந்த வண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௬)

(பிறந்தநாள் வருகிறவாரபலம்.)

சென்மநக்ஷத்திரத் தாதிவாரம்வரிற் றீயாதலைச்சலுண்டாம்
திங்களுக்காகில்வெகு சுகபோசனத்தினொடு திருமாதினருளுமுண்டாம்
வன்மைதருமங்கார வாரம்வந்தாற்சிறிதும் வாராதுசுகமதென்பார்
மாசில்பலகலைபயில்வர் மேன்மையாம்புந்தியெனும் வாரத்துடன்கூடினால்
நன்மைதருகுருவார மதுசேர்ந்துவரிலாடை நன்மையுடனேவந்திடும்
நாரியருடன்போக மிகவுமுண்டொருவெள்ளி நல்லவாரத்தில்வந்தால்
அன்மருவுபீடையுண் டாமென்பர்சனியினுக் கமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௭)

(இதனையுடையவர்க்கு இதுவில்லையெனல்.)

பொன்னாசையுள்ளவர்க் குறவேதுறவேது பொங்குபசியுள்ளபேர்க்குப்
போதவேசுசியேது ருசியேதுமயல்கொண்டு போதமாதர்விழைவலையிலே
எந்நாளுமலைபவர்க் கசசமொடுவெட்கமே தென்றென்று முறுகல்விமேல்
இச்சையுளபேர்க்கதிக சுகமேதுதுயிலேது வெளிதாயிருந்துகொண்டே
பன்னாளுமலைபவர்க் கிகழேதுபுகழேது பாரிலொருவர்க்கதிகமே
பண்ணியிடுமூடருக் கறமேதுமறமலாற் பகர்கிளையமொன்றுளதுகாண்
அன்னைவருகரி யுரித்தணியுமெய்யனே யமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௮)

(மழைநாட்குறிப்பு.)

சித்திரைத்திங்கள்பதின் மூன்றுக்குமேனல்ல சீரானபரணிமழையும்
தித்தில்வைகாசியிற் பூரணைகழித்தபின் சேருநாலாநாளினில்
ஒத்துவருமழையுமவ் வானியிற்றேய்பிறையி லோங்குமேகாதசியினில்
ஒளிர்பருதிவீழ்பொழுதின் மந்தாரமும்மழையு முண்டாயிருந்தாடியில்
பத்திவருதேதியைந் தினிலாதிவாரமும் பகருமாவணிமூலநாள்
பரிதியுமறைந்திடக் கனமழைபொழிந்திடப் பாரில்வெகுவிளைவு முண்டாம்
அத்தனேபைங்குவளை மாலையணிமார்பனே யண்ணலெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (எக)

(இருந்துமுதவாமை)

சமயத்திலுதவாத நிதியமேன்மிக்கதுயர் சார்பொழுதிலாதகிளையேன்
சபைமுகத்துதவாத கல்வியேனெதிர்வரு சமரத்திலாதபடையேன்
விமலனுக்குதவாத பூசையேனுருமிருள் வேளைக்கிலாதசுடரேன்
வெம்பசிக்குதவாத வன்னமேனீடுகுளிர் வேளைக்கிலாதகலையேன்
தமதுதளர்வேளைக் கிலாததாரமனைவியேன் சரசத்திலாதநகையேன்
சாமரணகாலத்தி லுதவாதபுதல்வனேன தரணிமீதென்பர்கண்டாய்
அமரர்க்குமுனிவர்க்கு மொருவர்க்குமெட்டாத வாதியேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (அ௦)

(மறையோர்சிறப்பு.)

ஓராறுதொழிலையுங் கைவிடார்சௌசவிதியொன்று தப்பாதுபுரிவார்
உதையாதியிற்சென்று நீர்படிகுவார்கால மொருமூன்றினுக்குமறவா
தாராய்ந்துகாயத்ரி யதுசெபிப்பார்நாளு மதிதிபூசைகளபண்ணுவார்
யாகாதிகருமங்கண் மந்த்ரகிரியாலோப மின்றியேசெய்துவருவார்
பேராசைகொண்டிடார் வைதிகநன்மார்க்கமே பிழையாதிருக்குமறையோர்
பெய்யெனப்பெய்யுமுகி லவர்மகிமையெவர்களும் பேசுதற்கரிதரிதுகாண்
ஆரார்நெடுஞ்சடில வமலனேயுமைபாக மண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (அக)

(அரசர்சிறப்பு)

மனுநீதிமுறைமையும் பரராஜர்கொண்டாட வருமதிகரணவீரமும்
வான்விஜயமொடுசரச சாதனவிசேஷமும் வாசிமதகரியேற்றமும்
கனமாமமைச்சரும் பலமானதுர்க்கமுங் கைகண்டபோர்ப்படைகளும்
கஜரதபதாதியுந் துரகப்ரவாகமுங் காலதேசங்களவையும்
இனிதாயறிந்ததா னுபதிகளொடுசமர்க் கிளையாததளகர்த்தரும்
என்றும்வற்றாததன தானியசமுத்திரமு மேற்றமுளகுடிவர்க்கமும்
அனைவோருமெச்சவிங் கிவையெலாமுடையபே ரரசராமருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (அஉ)

(மன்மதனுபகரணங்கள்.)

வெஞ்சிலைசெழுங்கழைவி னாரிகருவண்டின மேல்விடுங்கணைகளலராம்
வீசிடுந்தென்றல்தேர் பைங்கிள்ளையேபரிகள் வேழங்கெடாதவிருளாம்
வஞ்சியர்பெருஞ்சேனை கைதையுடைவாணெடிய வண்மைபெறுகடன்
மகரம்பதாகைவரு கோகிலங்காகளம் மனதேபெரும்போர்க்களம் [சமரிம்
சஞ்சரிகவிசைபாடல் *குமுதநேயன்கவிகை சாமரதியேமனைவியாம்
தருகண்மடமாதரிள முலைமதகடமாமல்குல் தவறுதிருக்குமிடமாம்
அஞ்சுகணைமாரவேட்டீந்தென்பெரியோர்க்கெலாமமுதமேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௧)

(பகைகொளத்தகாதவர்.)

மன்னவரமைச்சர்தூர்ச் சனர்கோளர்தூதரொடு மாறுதமர்மமுடையோர்
வலுவர்கரணிகர்மிகு பாகஞ்செய்தன்னமிடு மடையர்மந்திரவாதியர் [கள்
சொன்னமுடையோர்புலைய ருபதேசமதுசெய்வோர் சூழ்வைத்தியர்கவிதை
சொற்றிடும்புலவரிவர் பதினைந்துபேரொடுஞ் சொப்பனந்தனிலாகிலும்
நன்னெறியறிந்தபேர் பகைசெய்திடார்களிந் நானிலத்தென்பர்கண்டாய்
நாரியோர்பாகனே வேதாகமம்பரவு நம்பனேயன்பர்நிதியே
அன்னமூர்பிரமனுங் கண்ணனுங்காணாத வண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௨)

(இதாகிதஞ்செய்துபயன்கொள்வன.) [ளைத்

சுவைசேர்கரும்பைவெண் பாலைப்பருத்தியைச் சொல்லுநன்னெல்லையெள்
தூயதெங்கின்கனியை யெண்ணாததுட்டரைத் தொண்டரைத்தொழுதொழு
நவைதீருமாறுகண்டித் தேபயன்கொள்வர் நற்றமிழ்க்கவிவாணரை [ம்பை
நலமிக்கசெழுமலரை யோவியமெனத்தக்க நயமுள்ளநாரியர்தமைப்
புவிமீதிலுபகார நெஞ்சரைப்போர்செயும் புகழ்வீரரைத்தூயரைப்
போதவும்பரிவோடிதஞ்செய்ய மிகுபயன்புகழ்பெறக்கொள்வர்கண்டாய்
அவமதிதவிர்த்தென்னையாட்கொண்டவள்ளலேயண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௯௩)

(தருமம்.)

பெறுமகப்பெறுவித்தலொடு காதோலைநாடோறும் பிள்ளைகளருந்திடும்பால்
பேசரியசத்திர மடமாவுரிஞ்சுகல்பெண் போகநாவிதன்வண்ணான்
மறைமொழிகணாடிதண் ணீர்தலைக்கெண்ணெய்பசு வாயினுறைபிணமடக்கல்
வாவியிறுமுயிர்மீட்ட றின்னுபொருளடைகாய் வழங்கல்சுண்ணாம்புதவுதல்
சிறையுறுபவர்க்கமுது வெற்றிலங்காத்தல்பொழில் செய்தன்முன்னூலின்
திகழ்விலங்கூண்பிச்சை யறுசமயருக்குண்டி தேவாலயமவுஷதம் [மணம்
அறைதல்கற்போர்க்கன்ன நாலெட்டறங்களுமுன்னைசெயவருமைமதவே
ள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (௯௪)

---

* குமுதநேயன் = சந்திரன்.

(இல்லறம்.)

தந்தைதாய்சற்குருவை யிட்டதெய்வங்களைச் சன்மார்க்கமுள்ளமனைவியைத்
தவறாதசுற்றத்தை யேவாதமக்களைத் தனைநம்பிவருவோர்களைச் [ஞரைத்
சிந்தைமகிழ்வெய்தவே பணிவிடைசெய்தோர்களைத் தென்புலத்தோர்வறி
திதிலாவதிதியைப் பரிவுடையதுணைவரைத் தேனுவைப்பூசுரர்தமைச்
சந்ததஞ்செய்கடனை யொன்றுமிவைபிழையாது தான்புரிந்திடலில்லறம்
சாருநலமுடையராந் துறவறத்தோருமிவர் தம்முடன்சரியாயிடார்
அந்தரியுயிர்க்கெலாந் தாய்தனினுநல்லருட் க[illegible]னையருணமமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உரு)

(புராணம்.)

தலைமைசேர்பௌடிகமி லிங்கமாற்கண்டமெழில் சாரும்வாமனமச்சமே
சைவம்பெருங்கூர்மம் வரும்வராகங்காந்த சரிதமேபிரமாண்டமும்
நிலைமைசேரிப்பத்து முயர்சிவபுராணமா நெடியமால்கதைவைணவம்
நீதிசேர்காருட நாரதம்பாகவத நீடியபுராணநான்காம்
கலைவலர்சொல்பதுமமொடு பிரமகைவர்த்தமே கமலாலயன்காதையாம்
கதிரவன்காதையே சூரியபுராணமாங் கனல்காதையாக்கினேயம்
அலைகொண்டநதியும்வெண் மதியுமறுகும்புனையு மத்தனேயருணமமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே (உசு)

(புகழ்ச்சி.)

டருகாதவமுதொருவர் பண்ணுதபூஷணம் பாரின்மறையாதநிதியம்
பரிதிகண்டலராத நிலவுகண்டுலராத பண்புடையபங்கேருகம்
கருகாதபுயல்கலைக ளருகாததிங்கள்வெங் கானிலுறையாதசீயம்
கருதரியவிக்குண மனைத்துமுண்டானபேர் காசினியிலருமையாகும்
தெரியவுரைசெய்யின்மொழி கீர்த்திவருகல்வியொடு சீரிதயமீகைவதனம்
திடமானவீரமிவை யென்றறிகுவார்களிச் செகமெலாங்கொண்டாடவே
அருள்கற்பதருவென்ன வோங்கிடுந்தானதுரை யாகுமெமதருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உஎ)

(திருமாலவதாரம்.)

சோமுகாசுரனைமுன் வதைத்தமரர்துயர்கெடச் சுருதிதந்ததுமற்சமாம்
சுரர்தமக்கமுதீந்த தாமையாம்பாய்போற் சுருட்டிமாநிலமெடுத்தே
போமிரணியாக்கதனை யுயிருண்டதேனமாம் பொல்லாதகனகனுயிரைப்
போக்கியதுநரசிங்க முலகளந்தோங்கியது புனிதவாமனமூர்த்தியாம்
ஏழுறுமிராவணனைவென் றவனிராகவ னிரவிகுலம்வேரறுத்தோன்
வர்பரசிராமன்வரு கண்ணனொடுபலராம னிப்புவிபயந்தவிர்த்தோர்
அமினியகற்கியினி மேல்வருவதிவைபத்து மரிவடிவமாருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே .(உஅ)

(சிவமூர்த்தி.)

பிறைசூடியுமைநேசன் விடையூர்திநடமிடும் பெரியனுயர்வதுவைவடிவகன்
பிச்சாடனன்காம தகனன்மறலியைவென்ற பெம்மான்புரந்தகித்தோன்
மறமலிசலந்தரனை மாய்த்தவன்பிரமன்முடி வௌவினோன்வீரேசுரன்
மருவுநரசிங்கத்தை வென்றவரனுமைபாகன் வனசரன்கங்காளனே
விறன்மேவுசண்டேச ரக்ஷகன்கடுமார்ந்தி மிக்கசக்கரமுதவினோன்
விநாயகற்கருள்செய்தோன் குகனுமையுடன்கூடி மளிரோகபாதன்சுதன்
அறிவரியதக்ஷிணா மூர்த்தியொடிலிங்கமா மையனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௯)

(கவிவணக்கம்)

மலரிதழிபைங்குவளை மென்முல்லைமல்லிகை மருக்கொழுந்துயர்கூவிளம்
மற்றுமுள்வாசமலர் பத்திரஞ்சிலசூடி மணிமுடிதனிற்பொறுத்தே
சிலவெருக்கொடுவனத் துட்பூளைபச்சறுகு செம்முள்ளிமலர்சூடவே
சித்தம்வைத்திடவுமங் கீகரித்திடுமகா தேவதேவா தெரிந்தே
கல்வலருணாக்குருன் கவியோடம்பலவாண கவிராயனுங்குமென்புன்
கவியையுஞ்சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனுகுமடனுகமும்
அலைபெருகுகங்கையுஞ் செழுமதியமும்புனையு மமலனேயருமைமதவேள்
அனுதினமுமனதினினை திருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௱)

அறப்பளீசுர சதகம்.

முற்றிற்று.